பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

07 09 2024 6 30

சனிக்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சமூகத்தில் மூடநம்பிக்கைகளை அகற்றி, மாற்றங்களை கொண்டு வருவதே கல்வி என குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

2. தமிழகத்தில் திறன்வாய்ந்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், தொழில் வளர்ச்சியை ஊக்கவிக்கவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

3. தமிழகத்தில் உடல் உறுப்பு தானம் செய்வதற்காக இதுவரை 14 ஆயிரத்து 300 பேர் பதிவு செய்துள்ளதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சு. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

4. இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

5. தமிழகத்தில் அடுத்த 7 நாட்களுக்கு ஒருசில இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

சமூகத்தில் மூடநம்பிக்கைகளை அகற்றி, மாற்றங்களை கொண்டு வருவதே கல்வி என குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் கோரக்பூரில் சைனிக் பள்ளியை அவர் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், தோல்விகளைக் கண்டு மாணவர்கள் துவண்டுவிடாமல் வெற்றியின் தொடக்கமாக கருத வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மத்திய அரசு மேற்கொண்டு வரும் உறுதியான நடவடிக்கைகள் காரணமாக இந்தியா பல்வேறு துறைகளில் முன்னேற்றம் அடைந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் திறமையான இளைஞர்களுக்கு எண்ணற்ற வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையிலும், தொழில் வளர்ச்சியை அதிகரிக்கும் வகையிலும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் அந்நிய முதலீடுகளை ஈர்க்கும் வகையில் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நியூயார்க் மெலன் கார்பரேஷன் வங்கி அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்ட முதலமைச்சர் தமிழகத்தில் முதலீடு செய்ய வருமாறு அழைப்பு விடுத்தார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் வங்கி சேவைகள் வழங்குவதற்கான வாய்ப்புகள் குறித்து இந்த சந்திப்பின்போது விரிவாக விவாதிக்கப்பட்டதாக அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 3 ஆண்டுகளில் மாநில அரசு மேற்கொண்ட சீரிய நடவடிக்கைகள், முதலீட்டாளர்களை ஈர்த்து வருவதாகவும், இதன்மூலம் ஏராளமான வாய்ப்புகள் உருவாகும் என்றும் அரசின் செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் மூளைச்சாவு அடைந்து உடல் உறுப்பு தானம் செய்பவர்களுக்கு அரசு மரியாதை வழங்கும் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மாசு. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இத்திட்டத்தை ஒடிசா, ஆந்திரா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களும் செயல்டுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டினத்தில் இருந்து மூன்று படகுகளில் சென்ற மீனவர்களை நெடுந்தீவு அருகே எல்லைதாண்டி மீன்பிடித்ததாகக் கூறி, இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

அவர்களது 3 படகுகளையும் இலங்கை கடற்படையினர் பறிமுதல் செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் இலங்கையில் உள்ள காங்கேசம் துறைமுகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

விநாயகர் சதுர்த்தி விழா இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது.

ஆவணி மாதம் வளர்பிறையின் நான்காம் நாளான சதுர்த்தி தினத்தன்று விநாயகரின் பிறந்தநாளை குறிக்கும் வகையில் இந்த விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

தையொட்டி சேலத்தில் பக்தர்களைக் கவரும் வகையில் பருவநிலை மாற்றத்தில் இருந்து பூமியைக் காக்க பூலோகம் மீது சிவன் சக்தியுடன் நடமாடும் விநாயகர் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அருகே சிட்லபாக்கத்தில் சந்திரயாண் பிள்ளையார், அத்திமரத்தில் செய்யப்பட்ட அத்திவரதர் விநாயகர் சிலை உள்ளிட்ட ஆயிரக்கணக்கான விநாயகர் சிலையுடன் கூடிய கண்காட்சி நடைபெறுகிறது.

11 நாட்கள் நடைபெறும் இக்கண்காட்சியில் 21 ஆயிரம் விநாயகர் சிலைகள் இடம்பெற்றுள்ளன.

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூரில் 700க்கும் மேற்பட்ட இடங்களில் விநாயகர் சிலைகள் வைக்கப்பட்டு பக்தர்கள் வழிபட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கரூர் அருள்மிகு ஸ்ரீவிஷ்வகர்மா சித்தி விநாயகர் ஆலயத்தில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு சிறப்பு அபிஷேகம் மற்றும் தீபாராதனைகள் நடைபெற்றன.

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலில் உள்ள முக்குருணி விநாயகருக்கு வெள்ளிக் கவசம் சாத்தப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

தமிழகத்தில் பிரச்த்தித்தி பெற்ற பிள்ளையார்பட்டி, கற்பக விநாயகர் கோவில், திருச்சி மலைக்கோட்டை உச்சிப்பிள்ளையார் கோவில் உள்ளிட்ட அனைத்து விநாயகர் கோவில்களிலும் இன்று காலை நடைபெற்ற சிறப்பு பூஜைகளில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

மகாராஷ்ட்டிர மாநிலத்தில் விநாயகர் சதுர்த்தி விழா மிகவும் விமரிசையாகவும், கோலாகலத்துடனும் கொண்டாடப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வீடுகளில் மக்கள் விநாயகருக்கு கொழுக்கட்டை, சுண்டல் ஆகியவற்றை படைத்து பிரசாதங்களை வழங்கி மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடினர்.

<<<<>>>>

விநாயகர் சதுர்த்தி விழாவை ஒட்டி, குடியரசுத்தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிடோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், சமூக நல்லிணக்கம் மற்றும் சகோதரத்துவத்தை இப்பண்டிகை வலியுறுத்துவதாகக் கூறியுள்ளார்.

பேரிடரில் இருந்து அனைவரையும் காக்கவும், அனைவருக்கும் வளமான வாழ்க்கை அமையவும் இறைவனைப் பிரார்த்திப்போம் என்று தெரிவித்துள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் விடுத்துள்ள செய்தியில், ஒற்றுமை, சகோதரத்துவம் மற்றும் அர்ப்பணிப்பு உணர்வுடன் நாம் அனைவரும் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், இப்பண்டிகையை ஒட்டி நாட்டு மக்கள் அனைவருக்கும் தமது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதக குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் உள்ள சாலையோரப் பூங்காக்கள் மற்றும் தோட்டங்களில் மக்களுக்கு பயனளிக்கக்கூடிய மா, வேம்பு, பூவரசு போன்ற நாட்டு மரங்களை வளர்க்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச. ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சென்னை, தூத்துக்குடி, நெல்லை உள்ளிட்ட மாநிலத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் உள்ள பூங்காக்கள் மற்றும் கல்வி நிறுவன வளாகங்களில் நடப்பட்டுள்ள கோனாகார்பஸ் மரங்களை அகற்ற மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

இந்தவகை மரங்கள் சுற்றுச்சூழலுக்கும், மனிதர்களுக்கும் பெரும் ஆபத்தை விளைவிக்கும் என்று திரு. ராமதாசு அந்த அறிக்கையில் குறிப்பிட்டுளளார்.

<<<<>>>>

தமிழகத்தில் அடுத்த 7 நாட்களுக்கு ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை நகரின் ஒருசில பகுதிகளில் லேசனாது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே மன்னார் வளைகுடா, தென்தமிழக கடலோரப் பகுதிகள் மற்றும் அதனையொட்டிய குமரிக் கடல் பகுதிகளில் அடுத்த 4 நாட்களுக்கு சூறாவளிக் காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அப்பகுதிகளில் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

*மாவட்டச் செய்திகள்*

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ஆதரவற்ற மகளிர் மற்றும் கைம்பெண்களுக்கு அரசு சார்பில் வழங்கப்படும் நலத்திட்டங்களைப் பெறுவதற்கு **www.tnwidowwelfareboard.gov.in** என்ற இணையதளத்தில் முன்பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று ஆட்சியர் திரு. பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

-------------

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற களிமண் கொண்டு பொம்மைகள் செய்யும் கலைத்திருவிழாவில் மாணவ – மாணவியர் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

-------------

பெரம்பலூரில் மத்திய அரசு சார்பில் இயங்கி வரும் வெளிநாடு செல்பவர்களுக்கான முன்பயண புத்தாக்கப் பயிற்சி மையத்தில், பாதுகாப்பான வெளிநாட்டுப் பயணம் குறித்த கலந்துரையாடல் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

பாரீஸ் பாராலிம்பிக் மகளிர் ஒற்றையர் பிரிவு பேட்மிட்டன் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற தமிழக வீராங்கனை துளசிமதி முருகேசன், மாற்றுத்திறனாளிகள் விளையாட்டுப் போட்டிகளில் தங்களது திறனை வெளிப்படுத்தும் வகையில் அரசு சார்பில் உதவிகள் வழங்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், தாயம் திரும்பியபோது தமக்கு அளிக்கப்பட்ட சிறப்பான வரவேற்பு, மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது என்று கூறினார்.

--------------

பெங்களுருவில் நடைபெற்று வரும் துலிப் கோப்பை கிரிக்கெட் போட்டியில் மூன்றாம் நாளான இன்று இந்தியா-**B** அணி, 6 விக்கெட் இழப்புக்கு 150 ரன் எடுத்துள்ளது.

இந்தியா-பி அணி முதல் இன்னிங்சில் 321 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இந்தியா-ஏ அணியின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 231.

-------------

ஷாங்காய் டென்னிஸ் போட்டியில் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் ரித்விக் - அர்ஜுன் கதே இணை, சீன இணையிடம் தோல்வியடைந்தது.

---------------

ஜோர்டானில் நடைபெற்ற 18 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசியக்கோப்பை கூடைப்பந்து போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் சீனா 89-43 என்ற புள்ளிக் கணக்கில் இந்தியாவை வென்றது.

-------------

புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டு அரங்கில் இன்று நடைபெற்ற பள்ளி மாணவர்களுக்கான மண்டல கைப்பந்துப் போட்டியில் இன்று தேர்வு செய்யப்பட்ட வீரர்கள் மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்க தகுதி பெற்றனர்.

**<<<<The End>>>>**